விரும்புகிறேன்? இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகியும், இந்தப் பிரச்சினையில் ஏன் இவ்வளவு காலதாமதமாகியும், அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதைத் தெரிந்து கொள்ளவிரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம் ஒழுங்கு பிரச்சினையாக வரக் கூடாது என்பதற்காகத்தான் ஆய்ந்து பார்த்து, இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது. இங்கே இந்தப் பிரச் சினையைப் பற்றிப் பேசுகிறபோதுகூட, ஒரு தரப்பில் இன்றைக்கு குடியேறியவர்களுக்கு கொடுக்க வேண்டுமென்றும் இன்னொரு தரப்பில் அடிப்படை ஊழியர்களுக்கு கொடுக்க வேண்டுமென்றும் சொல்லுகிறபோதே, இங்கே சட்டமன்றத்திலேயே மாறுபட்ட கருத்து வருகிறது. அங்கே எவ்வளவு மாறுபட்ட கருத்து வந் திருக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் விசுவநாதன் அவர்கள் அறிவார் என்று கருதுகிறேன்.

விக்கிரவாண்டி பேரூராட்சிப் பகுதியில் செய்யப்பட்டுள்ள நில ஆக்கிரமிப்புகள்.

*வினா எண் 45—திரு. கே. எம். தங்கமணி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) விழுப்புரம் வட்டம், விக்கிரவாண்டி பேரூராட்சியில் ஏ. இராமசுப்பு என்கிற பெரும் செல்வந்தர் அரசு விதிகளுக்குப் புறம்பாக அரிசனங்களுக்கு ஒதுக்கப்பட்ட கண்டிஷன் பட்டாவை ரீசர்வே எண் 684/2 இல் 0.12 சென்ட் கிரயம் பெற்று நவீன பங்களா கட்டியிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) மேற்படி பேரூராட்சிக்கு சொந்தமான குட்டை புறம் போக்கு சர்வே எண் 684/3 இல் 0.08 சென்ட் இடத்தை இராம சுப்பு என்பவர் ஆக்கிரமித்திருப்பது உண்மையா?

(இ) ஆக்கிரமிப்பை அகற்றக் கோரி பொதுமக்களிட மிருந்து அரசுக்கு வந்துள்ள புகார் மனுவின்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) கேள்வியில் தெரியுமா என்று கேட்டிருக்கிறார்கள்; தெரியும் என்று பதில் சொல்கிறேன். (ஆ) கேள்வியில் உண்மையா என்று கேட்டிருக் கிறார்கள். உண்மை என்று பதில் அளிக்கிறேன். (இ) கேள்வியில், அதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்கிறேன்.

1982 பிப்ரவரி 5]

திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல் கேள்விக்குத் தெரியும் என்றும், இரண்டாவது கேள்விக்கு உண்மை என்றும், மூன்றாவது கேள்விக்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்தார்கள். அந்த நடவடிக்கை எப்போது எடுக்கப்படும்? ஆட்சித் தலைவர், ஆர்.டி.ஓ., தாசில்தார் ஆகியவர்களிடம் பெட்டிஷன் கொடுக்கப்பட்டு, ஆரம்ப நிலையில், கட்டிடம் கட்டப்பட்ட நிலையிலே அந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால், இதைத் தடுத்திருக்க முடியும் என்று கருதுகிறேன். ஆனால், இப்போது அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு கவனத்திற்கு வந்த பிறகு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் சொல்லி, அவர்கள் வட்டாட்சித் தலைவரிடத்தில் சொல்லி, அவர்கள் 1982 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 3 ஆம் நாளன்று ஷோகாஸ் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள் என்ற செய்தி நேற்றிரவு 12 மணிக்கு எனக்குக் கிடைத்திருக்கிறது.

திரு. கே. எம். தங்கமணி : நேற்று இரவுதான் ஷோகாஸ் நோட்டீஸ் கொடுத்ததாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்..

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : நான் அவைக்கு லேட்டஸ்டாக உள்ள விவரங்களைக் கொடுக்க வேண்டுமென்பதற்காக நேற்று இரவு பதிலைச் சேகரித்தேன் என்றுதான் சொன்னேன். நேற்று இரவு 12 மணிக்குத்தான் நோட்டீஸ் கொடுத்தார்கள் என்று சொல்லவில்லை.

திரு. கே. எம். தங்கமணி : என்னிடம் அந்தக் கட்டிடத்தின் போட்டோ இருக்கிறது ; இதையெல்லாம் அறிந்து கொள்ளாமல் அதிகாரிகள் ஏன் உடனடியாக நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அந்தக் கட்டிடத்தின் படத்தைக் காண்பித்தார்கள். அந்தக் கட்டிடத்தின் மதிப்பு ஏறக்குறைய இரண்டு இலட்சத்திற்கு அதிகமாக இருக்கும். ஏழை எளியவர்களுக்குக் கொடுக்கப்பட்ட நிலத்தில் அரசின் நிபந்தனையை மீறி விற்றிருக்கிறார்கள். வாங்கியவர்களும் அரசின் நிபந்தனையை மீறி வாங்கியிருக்கிறார்கள். அவரை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். பழனிவேல் : விழுப்புரம் பேரூராட்சிக்குச் சொந்தமான நிலம் அரிசனங்களுக்கு ஒதுக்கப்பட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். அரிசனங்களுக்கு ஒதுக்கப்பட்ட புறம்போக்கு

1982 பிப்ரவரி 5]

நிலத்தில் பங்களா கட்டும் அளவுக்கு அரசு அதிகாரிகள் எப்படி அனுமதித்தார்கள்? குடிசை போட்டால் கூட பிரித்துப் போடு கிறவர்கள் எப்படி பங்களா கட்ட அனுமதித்தார்கள்? அதை உடனடியாக அப்புறப்படுத்தி அவர் மீது நடவடிக்கை எடுக்கப் படுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: அந்த நிலம் அரிசனங்களுக்கு ஒதுக்கப்பட்டது என்பது சரியல்ல. அரிசனங்கள் அல்லாதவர்களுக்கும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அப்படி ஒதுக்கப் பட்டவர்களின் சம்மதத்தின் பேரில் கட்டிடம் கட்டப்பட்டிருக் கிறது. அதுபற்றி அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்த பிறகு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. எல். இளையபெருமாள்: அமைச்சர் அவர்கள் அந்த நிலம் அரிசனங்களுக்கு ஒதுக்கப்பட்டது அல்ல என்று சொல்லு கிறார்கள். ஆனால் அரிசனங்களுக்கு ஒதுக்கப்பட்ட கன்டிஷன் பட்டா என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. பல இடங்களில் இப்படி ஏழை எளியவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் அவர் களைப் பயமுறுத்தி அல்லது அதிகப் பணம் கொடுப்பதாகச் சொல்லி அந்த நிலத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படி எடுத்துக் கொண்டவர்களிடமிருந்து நஷ்டஈடு வாங்கி அந்த ஏழை எளியவர்களுக்கு உதவி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: கன்டிஷன் பட்டா என்பது அரிசனங்களுக்கு மட்டுமல்லாது மற்றவர்களுக் கும் கொடுக்கப்படுகிறது. இந்த நிலங்கள் அரிசனங்களுக்கு ரிசர்வ் செய்யப்பட்ட நிலங்கள் அல்ல என்பதைத் தெளிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அரசு ஆட்சிக்கு வந்த பிறகு, இப்படி கொடுக்கப்பட்ட நிலங்களை எல்லாம் பலர் விற்று விடு கிறார்கள் என்பதைக் கண்டு பிடித்து அதன் பேரில் நடவடிக்கை எடுத்து வருகிறோம். இதற்காக தனியாக அலுவலர்களைப் போட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டதில் இதுவும் கண்டு பிடிக்கப் பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழில் நுட்பக் கல்லூரி ஆசிரியர்களுக்கும் விருது வழங்கும் திட்டம்.

*வினா எண் 46—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) ஆசிரியர்களுக்கு மாநில அரசு விருது வழங்குவது போன்று தொழில் நுட்பக் கல்லூரி ஆசிரியர்களுக்கும் விருது வழங்க வேண்டுமென்று தொழில்நுட்பக் கல்வி வாரியம் தமிழக அரசிற்குப் பரிந்துரை செய்துள்ளதென்பது உண்மையா?